# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 35/2024 நாள்.10.02.2026

## PW1- திருமதி.ரேவதி , க/பெ. திரு.காமராஜ்

5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சொத்து என் அப்பாவுக்கு பாத்தியபட்டதா என்றால் ஆமாம். அவருக்கு எத்தனை பேர் வாரிசு என்றால் 10பேர். தாவா சொத்து தாத்தா சொத்தா என்றால் ஆமாம். அவருக்கு மொத்தம் எத்தனை பேர் வாரிசு என்றால் அப்பாவுடன் சேர்த்து 5பேர். அப்பா எப்போது இறந்தார் என்றால் 2008. வழக்கு சொத்து என்ன சொத்து என்றால் நெல், வாழைபோடும் விவசாய நிலம். அவற்றின் வருமானத்தை வைத்துதான் என் அப்பா எல்லோருக்கு நல்லபடியாக திருமணம் செய்துவைத்தார் என்றால் ஆமாம். எனக்கு எப்போது திருமணம் என்றால் 1993. அப்போது எனக்கு நல்ல சீர்வரிசை செய்தார் என்றால் இல்லை. என் கணவருக்கு எந்த ஊர் என்றால் தொட்டியம். திருமணத்திலிருந்து கணவருடன் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். என் அப்பா இறந்து 14 ஆண்டுகள் கழித்து வழக்குபோட்டுள்ளேன் என்றால் ஆமாம். என் திருமணத்திற்கு பிறகு எனக்கு ஒன்றும் கொடுப்பதில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்து என் சகோதரர் அனுபவத்தில் உள்ளது என்றால் ஆமாம் அடிக்கடி போகமுடியாததால் அவர்கள் பார்க்கிறார்கள். நான் 5ஆம் பிரதிவாதியின் எதிருரையை படித்து பார்த்தேனா என்றால் படிக்கவில்லை. என் அப்பா இறந்தபிறகு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரியல்ல. என் சகோதரர் நாலுபேருக்கும் விவசாயத்தை நம்பியுள்ளார்கள் என்றால் 2, 6 பிரதிவாதி அரசு வேலையில் உள்ளார்கள். அவர்கள் வேலையில் இருந்துகொண்டு விவசாயம் பார்க்கிறார் என்றால் ஆமாம். என் அண்ணன் நாலுபேரும் தனிதனி குடும்பம் என்றும் சொத்தை தனிதனியே அனுபவிக்கிறார் என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது. மற்ற சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 35 ஏக்கர். ஆண்வாரிசுகளுக்கு தலா 4 ஏக்கரும், பெண் வாரிசுகளுக்கு தலா 1 ஏக்கரும் பஞ்சாயத்தில் பிரிக்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. என்னை தவிர மற்ற சகோதரிகள் அவரவர்களுக்கு ஒதுக்கபட்ட சொத்தில் அனுபவம் செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அப்பா பெயரில் பட்டா இல்லை என்றால் வா.சா.ஆ.4 1 வது ஆவணத்தில் எழில்மாறன் பெயரிலும் 2வது ஆவணத்தில் எங்கள் பெயர் யார் பெயரும் இல்லை என்றும், 3வது ஆவணத்தில் 9ஆம் பிரதிவாதி எழில்மாறன் பெயரும், 4வது ஆவணத்தில் 6ஆம் பிரதிவாதி மாறன் பெயரும், 5வது ஆவணத்தில் எழில்மாறன் 9ஆம் பிரதிவாதி பெயரும், வா.சா.ஆ.4இல் 8வது ஆவணத்தில்அமணன் பெயரும்,

9வது ஆவணத்தில் 1ஆம் பிரதிவாதி குமணன், 10வது ஆவணத்தில் 6ஆம் பிரதிவாதி மாறன் பெயரிலும், 11 வது ஆவணத்தில் மாறன் மற்றும் பெரியவீட்டாயி பெயரிலும், 12வது ஆவணத்தில் எழில்மாறன் மற்றும் பிச்சை பெயரிலும் உள்ளது என்றால் ஆமாம். என் அப்பா இறந்தபின் சொத்துக்கள் வாய்மொழியாக பிரிக்கபட்டதால் அப்பா பெயரில் சொத்து இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பிரித்ததில் 2008 பாக ஆவணம் எழுதினார் என்றால் சரியல்ல அதற்கு நான் போகவில்லை. வழக்கு சொத்துக்கள் எல்லாம் வாய்மொழியாக பாகமாகி அவரவர்கள் ஏற்றுகொண்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு காலாவதி சட்டத்தால் பாதிக்கபட்டது என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.02.10 19:14:43 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**